©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 6.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 23]

சென்னை, புதன்கிழமை, ஜூன் 17, 2009
ஆனி 3, திருவள்ளுவர் ஆண்டு—2040

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

### தொழில் துறை

#### அறிவிக்கை

*[அரசாணை எண் 12, தொழில் (mm(1) துறை, நாள் : 2 பிப்ரவரி 2009.]*

1957ஆம் ஆண்டு சுரங்கங்கள் – கனிமங்கள் (மேம்படுத்துதல் – முறைப்படுத்துதல்) சட்டத்தின் (மத்திய சட்டம் 67/1957) 22 ஆம் பிரிவின்கீழும் 22 ஜூன் 1994 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டின் பாகம் II—பிரிவு 2, பக்கம் 1–இல் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட 319ஆம் எண் தொழில் துறை அறிவிக்கையை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மாவட்ட வன அதிகாரிகள் மற்றும் காவல் துறை ஆய்வாளர் பதவித் தரத்திற்கு குறையாத காவல் துறை பணியாளர்களின் அதிகார வரம்புக்குள் வரும் நேர்வுகளைப் பொறுத்தவரையில் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்காக தகுதி வாய்ந்த அதிகார வரம்புடைய நீதிமன்றத்தில் எழுத்து மூலம் புகார் அளிக்க அவர்களுக்கு இதனால் அதிகாரமளிக்கிறார்.

**எம். எஃப். பரூக்கி,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

#### அறிவிக்கை

*[அரசாணை (2D) எண் 38, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1)த் துறை, நாள்: 16 ஜூலை 2008.]*

1948—ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதிய பின்வரும் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் குறிப்பிடப்பட்டவாறு இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரு மாதங்கள் முடிவடைந்த அன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவு அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன இரு மாத கால அளவு முடிவடைவதற்கு முன்னர் யாதொரு நபரிடமிருந்து வரும் மறுப்புரை அல்லது கருத்துரை பரிசீலிக்கப்படும் என்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை சென்னை–600 006, தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசுச் செயலாளர், தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

**வரைவு அறிக்கை**

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 15–9–2004ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2, 453, 454 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை /824/2004 ஆம் எண்ணுள்ள அரசாணையை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் பின்வரும் விவர அட்டவணை I மற்றும் II–இல் குறிப்பிடப்பட்டவாறு, தமிழ்நாடு மாநிலத்தில் தங்கம் மற்றும் வெள்ளி பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை-I**

**தங்கப் பொருள்கள் தயாரிப்பு**

| *தொ.எண்* (1) | *பொருள்களைத் தயாரிக்க தேவைப்படும் தங்கத்தின் எடை* (2) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதம் (கிராம் ஒன்றுக்கு)* (3) | |
|---|---|---|---|
| | | *கற்கள் பதித்தவற்றிற்கு* | *கற்கள் இல்லாதவற்றிற்கு* |
| **A.** | **செய்யும் வேலைக்கேற்ற ஊதியம்:** | ரூ. காசு. | ரூ. காசு. |
| 1 | 1 கிராம் முதல் 5 கிராம் வரை | 41.61 | 103.77 |
| 2 | 5 கிராமுக்கு அதிகமாக ஆனால் 10 கிராம் வரை | 29.07 | 83.03 |
| 3 | 10 கிராமுக்கு அதிகமாக ஆனால் 20 கிராம் வரை | 20.07 | 62.26 |
| 4 | 20 கிராமுக்கு அதிகமாக ஆனால் 30 கிராம் வரை | 18.68 | 41.61 |
| 5 | 30 கிராமுக்கு அதிகமாக ஆனால் 40 கிராம் வரை | 16.61 | 33.21 |
| 6 | 40 கிராமுக்கு அதிகமாக ஆனால் 50 கிராம் வரை | 14.54 | 29.07 |
| 7 | 50 கிராமுக்கு அதிகமாக ஆனால் 75 கிராம் வரை | 12.46 | 24.91 |
| 8 | 75 கிராமுக்கு அதிகமாக | 10.37 | 20.76 |
| **B.** | **நாட்கூலி வீதம்:** | ரூ. 139.00 நாளொன்றுக்கு. | |

**விவர அட்டவணை–II**

**வெள்ளிப் பொருள்கள் தயாரிப்பு**

**A. கொலுசு தயாரிப்பு:**

| *தொ.எண்.* (1) | *பணியின் வகை.* (2) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (கிராம் ஒன்றுக்கு)* (3) |
|---|---|---|
| | | *ரூ. காசு.* |
| 1 | கம்பியாக இழுத்தல் | 16.61 |
| 2 | ஜதை வளைத்தல் | 207.56 |
| 3 | பூக்கள் தயாரித்தல்— | |
| | (a) கெட்டி | 124.54 |
| | (b) நுட்பமான | 103.77 |

| *தொ.எண்.* | *பணியின் வகை.* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (கிராம் ஒன்றுக்கு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | *ரூ. காசு.* |
| 4 | அரும்பு | 24.91 |
| 5 | சங்கிலி | 41.51 |
| 6 | சலங்கை | 103.77 |
| 7 | முகப்பு | 166.05 |
| 8 | திருகாணி | 145.28 |
| 9 | ஒன்றிணைத்தல் (முழுமையாக இணைத்தல்) | 186.80 |

**B. ஏனைய வெள்ளி பொருட்கள்:**

| *தொ.எண்* | *பொருள்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் வெள்ளியின் எடை* | *ஒவ்வொரு 10 கிராமுக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்.* | |
|---|---|---|---|
| | | *வேலைபாடற்ற பொருள்களுக்கு* | *வேலைப்பாடுள்ள ஏனைய பொருள்களுக்கு* |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| | | *ரூ. காசு* | *ரூ. காசு* |
| 1 | 1 கிராம் முதல் 10 கிராம் வரை | 24.91 | 33.21 |
| 2 | 10 கிராமுக்கு அதிகமாக ஆனால் 20 கிராம் வரை | 24.21 | 31.14 |
| 3 | 20 கிராமுக்கு அதிகமாக ஆனால் 30 கிராம் வரை | 22.84 | 29.07 |
| 4 | 30 கிராமுக்கு அதிகமாக ஆனால் 40 கிராம் வரை | 21.44 | 26.98 |
| 5 | 40 கிராமுக்கு அதிகமாக ஆனால் 50 கிராம் வரை | 20.75 | 25.61 |
| 6 | 50 கிராமுக்கு அதிகமாக ஆனால் 100 கிராம் வரை | 20.07 | 24.91 |
| 7 | 100 கிராமுக்கு அதிகமாக ஆனால் 200 கிராம் வரை | 18.68 | 24.91 |
| 8 | 200 கிராமுக்கு அதிகமாக ஆனால் 500 கிராம் வரை | 16.61 | 21.44 |
| 9 | 500 கிராமுக்கு அதிகமாக ஆனால் 1000 கிராம் வரை | 12.46 | 16.61 |
| 10 | ஒரு கிலோ கிராமுக்கு அதிகமாக | 10.37 | 13.14 |

**C. நாளொன்றுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்கள்:** 131.00 நாளொன்றுக்கு.

***விளக்கம் :***

**(1). அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், பணியாளர்களுக்கு பின்வருமாறு பணியாளர்களுக்கு பின்வருமாறு அகவிலைப்படியும் அளிக்கப்படவேண்டும்.

(i) அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டு சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டுடன் (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு 475 புள்ளிகள்) இணைக்கப்பட்டுள்ளது. 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு கூடுதலாக 27 காசுகள் (இருபத்தேழு காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக அளிக்கப்படவேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படித் திருத்தம், முந்தைய 12 மாதங்களுக்கான அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரை நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டின் சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ***தமிழ்நாடு அரசிதழில்*** இந்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) மாத ஊதியத்தைக் கணக்கிட நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்கவேண்டும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக் கூடாது.

(4) தற்போது வழங்கப்பட்டுவரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களை விட அதிகமாக இருக்குமிடங்களில், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசுச் செயலாளர்.*

*(தமிழாக்கம்)*

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை,.*

**அறிவிக்கை**

*[அரசாணை (2D) எண் 45, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 2 செப்டம்பர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதிய வீத சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதன் பின்னர், இந்த வரைவு அறிவிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர்மூலமாக ‘‘அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009’’ என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 01 டிசம்பர் 2004 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2, 586 – 588ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு 1064/2004ஆம் எண்ணுள்ள அறிவிக்கை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு மாநிலத்தில் தச்சுத் தொழில் மற்றும் கருமான் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதே விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியில் நிகரான பதிவுகளில், குறிப்பிட்டுள்ளவாறாக இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### தச்சுத் தொழில் மற்றும் கருமான் தொழிலில் வேலைவாய்ப்பு

| தொடர் எண் | பணி/தொழிலாளர்களின் வகைகள். | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் அ | மண்டலம் ஆ | மண்டலம் இ |
| (1) | (2) | | (3) | |
| | | ரூ.காசு. | ரூ.காசு. (நாளொன்றுக்கு) | ரூ.காசு. |
| **I.** | **தச்சுத் தொழில்:** | | | |
| | *(அ) உயரளவு பயிற்சித்திறன் பெற்றவர்:* | | | |
| | (1) மேற்பார்வையாளர்<br>(2) மாதிரி வடிவமைப்பு தயாரிப்பாளர்<br>(3) உட்புற அலங்கார வேலைப்பாடு செய்பவர்<br>(4) மெத்தை – திண்டுவேலை செய்பவர் (அநிஹோல்ஸ்டிரி)<br>(5) மரச்செதுக்கு செய்பவர் | 206.00 | 171.50 | 153.00 |
| | *(ஆ) பயிற்சித்திறன் பெற்றவர்:* | | | |
| | 1. தச்சர்/மரகடைசல் செய்பவர்/மரம் இழைப்பவர் (ஒட்டுப்பலகை வேலைகள்.) | 187.50 | 162.00 | 145.00 |
| | *(இ) ஓரளவு பயிற்சித்திறன் பெற்றவர்:* | | | |
| | (1) தச்சு வேலை உதவியாளர்<br>(2) சிப்பம் செய்பவர்<br>(3) மெருகேற்றுபவர்<br>(4) வீனரிங் பிரஸ்ஸிங் (ஒட்டுப்பலகை பணிகள்) | 171.50 | 153.00 | 136.00 |
| | *(ஈ) பயிற்சித்திறன் பெறாதவர்:* | | | |
| | (1) தொழில் பழகுபவர்<br>(2) உதவியாளர்<br>(3) ஒட்டுப்பலகைப் பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய வகைப் பணியாளர்கள் | 145.00 | 136.00 | 127.00 |
| | *(உ) மேற்சொன்ன வகையில் சேராத ஏனைய வகையினர்:* | 145.00 | 136.00 | 127.00 |
| **II.** | **கருமான் தொழில்:** | | | |
| | *(அ) பயிற்சித்திறன் பெற்றவர்:* | | | |
| | (1) மேற்பார்வையாளர்<br>(2) பூட்டு செய்வது உட்பட கருமான் வேலை செய்பவர்<br>(3) பற்ற வைப்பவர்<br>(4) மென் உருக்கு பாத்திரங்கள் செய்பவர்<br>(5) வேளாண் கருவிகள் செய்பவர் (கால்நடைகளுக்கான லாடம் செய்வது உட்பட) | 187.50 | 162.00 | 145.00 |

| *தொடர் எண்* | *பணி/தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | | |
|---|---|---|---|---|
| | | *மண்டலம் அ* | *மண்டலம் ஆ* | *மண்டலம் இ* |
| *(1)* | *(2)* | | *(3)* | |
| | | *ரூ.காசு.* | *ரூ..காசு. (நாளொன்றுக்.)* | *ரூ. காசு.* |
| *(ஆ)* | *ஓரளவு பயிற்சித்திறன் பெற்றவர்:* | | | |
| | (1) வெட்டுதல் (2) வளைத்தல் (3) வர்ணம் பூசுதல் | 171.50 | 153.00 | 136.00 |
| *(இ)* | *பயிற்சித்திறன் பெறாதவர்:* | 145.00 | 136.00 | 127.00 |
| *(ஈ)* | *மேற்சொன்ன வகையில் சேராத ஏனைய வகையினர்:* | 145.00 | 136.00 | 127.00 |
| **III.** | **அலுவலகப் பணியாளர்கள்:** | | | |
| | (1) மேலாளர் | 6286.00 | 5760.00 | 5237.00 |
| | (2) கணக்காளர் / காசாளர் (3) எழுத்தர் / தட்டச்சர் (4) பண்டகசாலை காப்பாளர் | 5587.00 | 4796.00 | 4278.00 |
| | (5) அலுவலக உதவியாளர் (6) காவலாள் | 4538.00 | 4187.00 | 4012.00 |
| | (7) துப்புரவுப் பணியாளர் / பெருக்குபவர் (8) மேற்சொன்ன வகையில் சேராத ஏனைய வகையினர். | 4012.00 | 3838.00 | 3662.00 |

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசுச் செயலாளர்.*

*(தமிழாக்கம்)*

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**அறிவிக்கை**

*[அரசாணை (2டி) எண் 52, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 16 அக்டோபர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 01–10–2003ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு–2, 376 முதல் 378 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட, II (2)/தொ.ந.வே.வா. 635/2003ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனை குழுவுடன் கலந்தாலோசித்தப் பின்னர் தமிழ்நாடு மாநிலத்தில், செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்புத் தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டு, கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இதனால் திருத்தியமைக்கிறார். இந்த அறிவிக்கையின் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

### செங்கற்கள், ஓடுகள் தயாரிப்புத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு பணியாளர்களின் வகைகள்

| | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்.* | |
|---|---|---|---|
| | *(1)* | *(2)* | |
| | | | *ரூ.பை.* |
| **தொகுதி I தேர்ச்சிப் பெற்ற பணியாளர்கள்:** | | | |
| 1. | கருமார்கள் | மாதம் ஒன்றுக்கு | 2,197.00 |
| 2. | மரவேலை செய்பவர்கள் (தச்சர்கள்) | | |
| 3. | பொருத்துநர்கள் | | 2,249.00 |
| 4. | மின் கம்மியர்கள் | | |
| 5. | எந்திர கம்மியர் | | |
| 6. | கொத்தனார்கள் | | |
| 7. | இயக்குபவர்கள் | | 2,197.00 |
| 8. | என்ஜின் ஓட்டுநர்கள் | | |
| 9. | பற்ற வைப்பவர்கள் | | |
| 10. | அச்சு தயாரிப்பவர்கள் | | 2,249.00 |
| **தொகுதி II நிலை - I பணியாளர்கள்:** | | | |
| 1. | அச்சு உதவியாளர்கள் (Mould Helpers) | | |
| 2. | மண்ணை அழுத்தி வழவழப்பாக்குபவர் (Press man) | | |
| 3. | செங்கற்களை தயாரிப்பவர்கள் (அல்லது) ஓடுகள் தயாரிப்பவர்கள் | | |
| 4. | அச்சிலிருந்து எடுப்பவர்கள் (Die pullers) | | |
| 5. | களிமண்ணை துண்டமாக வெட்டுபவர் மற்றும் மண்ணை மிதிப்பவர் | | |
| 6. | களிமண்ணை கலப்பவர்கள் | | |
| 7. | செங்கற் சூளையில் சுமை ஏற்றுபவர் மற்றும் இறக்குபவர் | நாள் ஒன்றுக்கு | 79.50 |
| 8. | சூலையிற் சுட்ட செங்கற்களை வகைப்படுத்துபவர்கள் மற்றும் சிப்பம்–செய்பவர்கள் (அடுக்குவது உட்பட) | | |
| 9. | உருளையை கழற்றுபவர்கள் | | |
| 10. | ஓடுகளை ஒழுங்காக வெட்டுபவர்கள் (Tile Timmers) | | |
| 11. | செயற்கை முறையில் செங்கற்களை உலர வைக்கும் பணியில் ஈடுபடும் உதவியாளர்கள் | | |
| 12. | சூளை எரிப்பவர்கள் | | |
| 13. | பாதுகாவலர் அல்லது காவலாள் | | |
| **தொகுதி III நிலை-II பணியாளர்கள்:** | | | |
| 1. | பொருட்களை கையாளும் தொழிலாளர்கள் | | |
| 2. | பொருட்களை கொண்டு செல்பவர்கள் | | |
| 3. | உதவியாளர்கள் | நாள் ஒன்றுக்கு | 74.00 |
| 4. | ஓடுகளை கொண்டு செல்பவர்கள் | | |
| 5. | எரிபொருட்களைக் கொண்டு செல்பவர்கள் | | |

| பணியாளர்களின் வகைகள் | குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள். | |
|---|---|---|
| (1) | (2) | |
| | | ரூ. பை. |
| 6. களிமண்ணை கொண்டு செல்பவர்கள் மற்றும் எடுத்துச் செல்பவர்கள் | | |
| 7. ஏற்றி இறக்கும் பணியை மேற்கொள்ளும் உதவியாளர்கள் | | |
| 8. பாளங்களை வெட்டுபவர்கள் மற்றும் பாளங்களை எடுத்துச் செல்பவர்கள் | | |
| 9. களிமண் வழங்குவோர் (Clay Feeders) | | |
| 10. பொதுவான கூலிவேலை செய்யும் தொழிலாளர்கள் | | |
| 11. பாளங்களை ஒழுங்குப்படுத்தி வைப்பவர் | | |
| 12. துப்புரவு செய்பவர் | நாளொன்றுக்கு | 74.00 |
| 13. சட்டத்திலிருந்து சுடப்படாத ஓடுகளை எடுப்பவர்கள் | | |
| 14. சுடப்படாத செங்கற்கள் மற்றும் ஓடுகளை எடுத்துச் செல்பவர்கள் | | |
| 15. செங்கல் தயாரிப்பு கருவியை வழங்குபவர்கள் (Pallet Suppliers) | | |
| 16. செங்கல் தயாரிப்பு கருவியை சேகரிப்பவர்கள் (Pallet Collectors) | | |
| 17. நீர் கொண்டு செல்பவர்கள் | | |
| 18. மணல் மற்றும் சிமிட்டியை கலப்பவர்கள் (மொசைக்) | | |
| 19. மொசைக் கற்களை தலைச் சுமையாக எடுத்துச் செல்லும் தொழிலாளர்கள் | | |
| 20. மணல் வழங்குபவர்கள் (மொசைக்) | | |
| 21. ஓடுகளை ஒட்டுபவர்கள் (மொசைக்) | | |
| 22. பெட்டி அகற்றுபவர் (மொசைக்) (Box Removers) | | |
| 23. வண்ணங்களை கலப்பவர்கள் (மொசைக்) | | |
| 24. சிப்ஸ்களை நேர்த்தியாக்குபவர் (மொசைக்) (Chips Screamers) | | |
| 25. I, II மற்றும் IV ஆம் தொகுதியின்கீழ் குறிப்பிடப்படாத ஏனைய தொழிலாளர்கள் | | |
| **தொகுதி IV பணியாளர்கள்:** | | |
| 1. முதலாள் | திங்கள் ஒன்றுக்கு | 2772.00 |
| 2. தொழில்நுட்ப மேற்பார்வையாளர் | திங்கள் ஒன்றுக்கு | 2567.00 |
| 3. மேற்பார்வையாளர்கள் | திங்கள் ஒன்றுக்கு | 2355.00 |
| 4. எழுத்தர் | திங்கள் ஒன்றுக்கு | 2302.00 |
| 5. கணக்காளர் | திங்கள் ஒன்றுக்கு | 2567.00 |
| 6. பண்டகக் காப்பாளர் | திங்கள் ஒன்றுக்கு | 2355.00 |
| 7. அலுவலகப் பையன் | திங்கள் ஒன்றுக்கு | 1992.00 |
| 8. (i) மேஸ்திரி | திங்கள் ஒன்றுக்கு | 2302.00 |
| (ii) மேஸ்திரி (12 ஆண்டுகளுக்கும் மேலாக மேஸ்திரியாக பணியாற்றியவர்கள்) | திங்கள் ஒன்றுக்கு | 2395.00 |

Note: Rate for items 6–25 (நாளொன்றுக்கு 74.00) applies to all items by bracket.

| *பணியாளர்களின் வகைகள்* | | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்.* |
|---|---|---|
| *(1)* | | *(2)* |
| | | *ரூ. காசு.* |
| **செங்கற்கள் தயாரிப்பதற்கான ஊதியங்கள் :** | | |
| 1 1000 எண்ணிக்கையிலான சூளை செங்கற்களுக்கு | | 221.78 |
| 2 1000 எண்ணிக்கையிலான நாட்டு செங்கற்களுக்கு | | 166.41 |
| 3 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளைக்கு கொண்டுசெல்ல | | 111.44 |
| 4 1000 எண்ணிக்கையிலான மேசை வார்ப்பு செங்கற்களுக்கு (Table Mould Bricks) | | 277.50 |
| 5 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளையிலிருந்து ஏற்றி, இறக்க | | 27.89 |
| 6 சூளைக்கு மணலைக் கொண்டுவந்து சேம்பரில் | | 66.13 |
| பரப்புவதற்கு விறகு அல்லது நிலக்கரியை கொண்டு வர டன்னிற்கு | | 56.58 |
| (அ) சூளையை எரிப்பவர் | நாள் ஒன்றுக்கு | 90.00 |
| (ஆ) மேசை வார்ப்பு செங்கற்களை வெட்டி எடுத்து, ஒழுங்காக அடுக்குவதற்கு | (1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு) | 278.47 |
| (இ) சேம்பர் செங்கற்களுக்கு | (1000 எண்ணிக்கை கொண்ட செங்கற்களுக்கு) | 221.78 |
| (ஈ) செங்கல் அளவு வரையறுக்கப்பட்ட செங்கல் அளவு 9"X4 ½X32" | (1000 எண்ணிக்கை கொண்ட செங்கற்களுக்கு) | 166.40 |
| 22.5 செ.மீ. X 11.25 செ.மீ. X 7.5 செ.மீ. 100 அடி தொலைவிற்குள் சுமை ஏற்ற வேண்டும். 100 அடி தொலைவிற்கு மேலாகச் சென்று சுமை ஏற்றப்படுமானால், அதற்கு பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொகை வழங்கப்படும். | | |
| **மொசைக் ஓடுகள் தயாரிப்பதற்கான ஊதியங்கள் :** | | |
| 1 சிமிட்டியிலான தனி வகை ஓடுகள் | நாள் ஒன்றுக்கு | 99.00 |
| (i) ஓடுகள் தயாரிப்பாளருக்கு | | |
| 2 மொசைக் ஓடுகள் | நாள் ஒன்றுக்கு | 79.50 |
| (ii) கலப்பவர் (Mixer) கலப்பதற்கானபடி | நாள் ஒன்றுக்கு | 11.50 |
| (iii) உதவியாள் | நாள் ஒன்றுக்கு | 79.50 |
| 3 சிமிட்டி ஓடுகளை பதிப்பவர்கள் | நாள் ஒன்றுக்கு | 79.50 |
| 4 அச்சு இயக்குபவர்கள் | நாள் ஒன்றுக்கு | 79.50 |

**விளக்கங்கள்:**

(1) மழைக்காலங்களில், பணி தொடங்கப்பட்ட பின்னர், மழையின் காரணமாக பணியாளர்கள் பணியை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுமாயின்/பணி முடிவடைவதன்பேரில் வழக்கமாக எவ்வளவு ஊதியத்தை அவர்கள் ஈட்டியிருப்பார்களோ, அத்தொகையில் 50 சதவீதம் தொகையைப் பெற அவர்களுக்கு அனுமதியளிக்கப்படவேண்டும்.

(2) அகவிலைப்படி, பணியாளர்களுக்கு, மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டு சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலைப் புள்ளியுடன் (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு 475 புள்ளிகள்) இணைக்கப்பட வேண்டும். மேற்கூறிய 475 புள்ளிகளுக்கும் மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், நாளொன்றுக்கு அகவிலைப்படியாக 15 காசுகள் (பதினைந்து காசுகள் மட்டும்) வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த திருத்த வீதமானது முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான, அதாவது, ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நுகர்வோர் சராசரி விலைப்புள்ளியின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் சராசரி விலைப்புள்ளி எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து அகவிலைப்படியின் முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(3) அன்றாட ஊதிய வீதம் மற்றும் அகவிலைப்படி என்பதில், விடுமுறை நாள் ஊதியமும் அடங்கும்.

(4) (i) நாட்கூலியைக் கணக்கிட மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(5) ஆண், பெண் தொழிலாளர்கள் ஒரே தன்மையுடைய வேலையை செய்யும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது.

(6) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மத்தியச் சட்டம் 63/1948) மற்றும் ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்கள் ஆகியவற்றின்கீழ் வராத செங்கல் மற்றும் ஓடுகள் முதலியவற்றை தயாரிக்கும் தொழிலில் பணியிலமர்த்தப்பட்டுள்ளவர்களும் விடுப்புக்கால பயன்கள் அல்லது நோய்க்கான சலுகைகள் அல்லது தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1958) கீழ்வரும் விடுமுறைகள் ஆகியவற்றையும் வருங்கால வைப்பநிதி மற்றும் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சலுகை ஆகியவற்றையும் பயன்படுத்த இயலாதவர்களும், மேற்சொன்ன சலுகைகளுக்குப் பதிலாக, தொகுதி-I மற்றும் தொகுதி–III-ன் கீழ்வரும் தொழிலாளர்களாக இருப்பின், அவர்களுக்கு நாளொன்றுக்கு 16.51 ரூபாயும், தொகுதி-II மற்றும் தொகுதி–IV இன் கீழ்வரும் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழிலாளர் அல்லது பணிக்காக, நாள் ஒன்றுக்கு 14.16 ரூபாயும் கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(7) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மை செயலாளர்.*

*(தமிழாக்கம்)*

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை,*

**அறிவிக்கை**

*[அரசாணை (2டி) எண் 53, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள் : 16 அக்டோபர் 2008.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 29 அக்டோபர் 2003 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்,** பாகம் II பிரிவு–2, 405–406 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2) தொ.ந.வே.வா. 691/2003 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்துப் பின்னர் கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் காப்பிக் கொட்டையைப் பதப்படுத்தும் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் நெடும்பத்தியில் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்; இந்த வரைவு அறிவிக்கை, இச்சட்டத்தின், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் கூறியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

### காப்பிக் கொட்டையைப் பதப்படுத்தும் பணிகளில் வேலைவாய்ப்பு

| தொடர் எண் (1) | பணியாளர்களின் வகை (2) | குறைந்தளவு ஊதிய வீதங்கள் (3) | |
|---|---|---|---|
| | | ரூ. காசு | |
| **தொகுதி- I** | | | |
| 1 | உதவி மேலாளர் | 2634.00 | மாதம் ஒன்றுக்கு |
| 2 | கணக்காளர் | 2414.00 | ,, |
| 3 | எழுத்தர்கள்/தட்டச்சர்கள்/காசாளர்கள் | 2360.00 | ,, |
| 4 | அலுவலக உதவியாளர் | 2223.00 | ,, |
| 5 | காவலாள் | 2223.00 | ,, |
| 6 | குழந்தைகள் காப்பக ஆயா | 2201.00 | ,, |
| **தொகுதி- II** | | | |
| 1 | மின் பணியாளர் | 2497.00 | ,, |
| 2 | தச்சர் | 2360.00 | ,, |
| 3 | பொருத்துபவர் | 2307.00 | ,, |
| 4 | என்ஜின் ஓட்டுநர் | 2497.00 | ,, |
| 5 | எந்திரக் கம்மியர் | 2467.00 | ,, |
| **தொகுதி- III** | | | |
| 1 | பணியிட (Yard) கண்காணிப்பாளர் | 2634.00 | ,, |
| 2 | மேஸ்திரி | 2307.00 | ,, |
| **சுமை ஏற்றுதல், இறக்குதல், குவித்து வைத்தல் ஆகிய பணிகள்:** | | | |
| **பதப்படுத்தப்படாத காப்பிக் கொட்டை:** | | | |
| 1 | லாரியிலிருந்து காப்பிக் கொட்டையை இறக்கி குவித்து வைத்தல் | 18.47 | டன் ஒன்றுக்கு |
| 2 | முதல்நாள் உலர வைப்பதற்கு | 12.12 | ,, |
| 3 | மேலும், ஒரு நாள் உலர வைப்பதற்கு | 6.83 | ,, |
| 4 | கிடங்கிற்கு எடுத்துச் செல்வதற்கு | 5.91 | ,, |
| 5 | மீண்டும் ஓரிடத்தில் குவித்து வைப்பதற்கு | 6.37 | ,, |
| 6 | ஒரு கிடங்கிலிருந்து மற்றொரு கிடங்கிற்கு எடுத்துச் சென்று குவித்தலுக்கு | 12.74 | ,, |
| 7 | கிடங்கு (எடை போடுதல்) | 0.53 | ,, |
| 8 | காப்பிக் கொட்டைகளில் தோல் நீக்குதலுக்கு | 26.40 | ,, |
| 9 | மலைத் தோட்டத்தில் குத்திய காப்பிக் கொட்டைக்குத் தோல் நீக்குதல் | 15.85 | ,, |
| 10 | மலைத் தோட்டத்தில் குத்திய காப்பிக் கொட்டைகளை லாரிகளிலிருந்து இறக்குதலுக்கு–குவித்து வைத்தலுக்கு | 14.75 | ,, |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| **பதப்படுத்தப்பட்ட காப்பிக் கொட்டை:** | | | |
| 1 | மாற்றப்பட்ட மொத்த அளவு (பதப்படுத்தும் கிடங்கிலிருந்து) | (50 கிலோவிற்கு) | ரூ.0.62 |
| 2 | மொத்த அளவு (முழுமையாகப் பதப்படுத்தப்பட்டது) | மூட்டை ஒன்றுக்கு | ரூ.1.56 |
| 3 | கலக்கப்பட்ட காப்பிக் கொட்டையின் மொத்த அளவு (பெருமளவு) | டன் ஒன்றுக்கு | ரூ.6.37 |
| 4 | மொத்தமாக ஓரிடத்தில் சேர்த்து வைத்தலுக்கு | டன் ஒன்றுக்கு | ரூ.29.03 |
| 5 | மாதிரி வகைகளை பெறுவதற்கு (Samples Drawing) | மாதிரி ஒன்றுக்கு | ரூ.1.06 |
| 6 | தோல் நீக்கப்பட்ட காப்பிக் கொட்டைகளை விற்பனை செய்வதற்காக (Peel Sales) சிப்பம் கட்டுதல், வழங்குதல் ஒப்படை செய்தல் (குறியிடுவது நீங்கலாக) | | |
| | சிப்பம் கட்டுதல், எடை போடுதல், | 21.11 | 39.58 |
| | மூட்டைகளைத் தைத்தல், | 7.91 | டன் ஒன்றுக்கு |
| | சுமை ஏற்றுதல் | 10.56 | |
| 7 | ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக் கொட்டைகளை சிப்பம் கட்டுதல் ஒப்படை செய்தல் (சிப்பம் செய்வது நீங்கலாக) 60 கி.கி. எடை அளவில் | | |
| | சிப்பம் கட்டுதல்—எடை போடுதல் | 23.76 | 44.88 |
| | மூட்டைகளைத் தைத்தல் | 10.56 | டன் ஒன்றுக்கு |
| | சுமை ஏற்றுதல் | 10.56 | |
| 8 | ஏற்றுமதி செய்யப்படும் காப்பிக் கொட்டைகளை சிப்பம் கட்டுதல், ஒப்படை செய்தல் (குறியிடுவது நீங்கலாக) 75 கி.கி. எடையளவில் சிப்பம் கட்டுதல் | | |
| | சிப்பம் கட்டுதல் – எடை போடுதல் | 23.76 | 44.88 |
| | மூட்டைகளைத் தைத்தல் | 23.76 | டன் ஒன்றுக்கு |
| | சுமை ஏற்றுதல் | 23.76 | |
| 9 | வகைவாரியாக ஒதுக்கி வைத்தல் குறித்த (set apart Charges) கட்டணங்கள் | | 44.87 டன் ஒன்றுக்கு |
| 10 | குறியிடல் | | 0.78 மூட்டை ஒன்றுக்கு |
| 11 | சாதாரண குறியிடல் | | 0.53 மூட்டை ஒன்றுக்கு |
| 12 | 'ஜோட்டா' (Jotta) கட்டணங்கள் | | 15.85 100 மூட்டைகளுக்கு |
| 13 | கிடங்கில் சிப்பம் கட்டுதல் (Depot packing) | | 44.87 டன் ஒன்றுக்கு |
| 14 | நான்கு முனைகளிலும் தைத்தல் மற்றும் கயிறு கொண்டு கட்டுதல் ஆர்.சி. (R.C) | | 26.40 டன் ஒன்றுக்கு |
| 15 | காப்பிக் கொட்டை ஏற்றுமதி செய்ய முத்திரையிடுவதற்கான கட்டணங்கள் | | 5.29 டன் ஒன்றுக்கு |
| **எடுத்துச் செல்வோர்:** | | | |
| 1 | பிளான்டேஷன் ஏ&சி | கிலோ கிராம் ஒன்றுக்கு | 0.53 காசு |
| 2 | பிளான்டேஷன் பி. மற்றும் ப்பிபரி | ” | 0.62 காசு |
| 3 | ரொபெஸ்ட்டா ஏ.பி & சி. | ” | 0.53 காசு |
| 4 | அரேபிய செரி மற்றும் ஏனைய வகைகள் | ” | 0.81 காசு |
| 5 | காப்பிக்கொட்டை மூட்டைகள், சாக்கு மூட்டைகள் ஆகியவற்றை எடுத்து வருதல், காப்பிக் கொட்டைகளை குவித்தல், அரைத்தல், எடைபோடுதல், ஆபத்து விளைவிக்கக்கூடிய ஏனைய பணிகளில் ஈடுபடுவோருக்கு | நாள் ஒன்றுக்கு | 74.00 |
| 6 | காப்பிக் கொட்டைகளைப் பரப்புதல், வாரிக் கொட்டுதல், உலர்த்துதல், சேர்த்துக் குவித்து வைத்தல் ஆகியவற்றிலும், பணியிடத்திலுள்ள பதப்படுத்தப்படாத காப்பிக் கொட்டை மூட்டைகளை சிப்பம் கட்டுதல், எடைபோடுதல் குவித்து வைத்தல் ஆகியவற்றிலும் காப்பிக் கொட்டைகளை சாக்கு மூட்டைகளில் கட்டுதல், காப்பிக் கொட்டைகளைப் பக்குவமாக உடைத்தலிலும் ஈடுபடுவோர்க்கு | நாள் ஒன்றுக்கு | 73.00 |

**விளக்கங்கள்:**

(1) பணியாளர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட குறைந்தளவு ஊதிய வீதங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(*i*) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டுக்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்களுடன் இணைக்கப்பட்டது. (அதாவது, 1982 : 100 என்பதை அடிப்படையாகக் கொண்ட 475 புள்ளிகள் ஆகும்) மேற்கூறிய 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு அகவிலைப்படியாக 0.15 காசுகள் (பதினைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(*ii*) அகவிலைப்படியின் இத்திருத்தம், முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகள் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செயலுக்கு வரும்.

(*iii*) அகவிலைப்படியின் முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டுக்கால (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான) நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணி ஒரே தன்மையுடையதாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித வேறுபாடும் இருக்கக் கூடாது.

(3) (*i*) ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிட வேண்டுமாயின், மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(*ii*) மாதாந்திர ஊதியங்களைக் கணக்கிட வேண்டுமாயின், ஒரு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**அறிவிக்கை**

*[அரசாணை எண் 57, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 17 அக்டோபர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனை குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் 02 ஜூலை 2003 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம்—II பிரிவு 2இல்/(ஆங்கிலத்தில்) 270ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட II(2)/(தொ.ந.வே.வா)/475/2003ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாக கீழே விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிட்டுள்ள, தமிழ்நாட்டில் புகையிலை தயாரிப்பு (வாசனை புகையிலை மற்றும் சுவைக்கும் புகையிலை) பணியில் ஈடுபட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு, இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

### புகையிலை தயாரிப்பு (வாசனைப் புகையிலை மற்றும் சுவைக்கும் புகையிலை) பணியில் வேலைவாய்ப்பு

| தொடர் எண் (1) | தொழிலாளர்களின் வகை (2) | குறைந்தளவு ஊதிய வீதங்கள் (3) | ரூ. காசு. |
|---|---|---|---|
| **I.** | **வாசனைப் புகையிலைத் தயாரிப்புப் பணி:** | | |
| 1. | புகையிலையைத் தரம் பிரித்து வகைப்படுத்துதல் | நாளொன்றுக்கு | 76.50 |
| 2. | புகையிலையைத் துண்டுகளாக வெட்டுதல் | நாளொன்றுக்கு | 76.50 |
| 3. | வெல்லப்பாகு கொதிகலனை கவனிப்பவர் | நாளொன்றுக்கு | 76.50 |
| 4. | வாழை மரப்பட்டையைத் தரம் பிரித்து உரிய அளவுகளாகச் செய்தல் | நாளொன்றுக்கு | 76.50 |
| 5. | வாசனைப் புகையிலையைப் பொட்டலங்களாகச் செய்தல், எடைபோட்டு பெயர்ச்சீட்டு ஒட்டுதலும் இதிலடங்கும் | நாளொன்றுக்கு | 76.50 |
| 6. | வாசனைப் புகையிலையைச் சிப்பம் செய்தல், சிப்பம் செய்தலும் கட்டுகளாகக் கட்டுதலும் இதிலடங்கும் | நாளொன்றுக்கு | 76.50 |
| 7. | வாசனைப் புகையிலையைப் பதப்படுத்துதல் | நாளொன்றுக்கு | 76.50 |
| **II.** | **சுவைக்கும் புகையிலைத் தயாரிப்புப் பணி:** | | |
| 1. | புகையிலையைத் தரம் பிரித்து வகைப்படுத்துதல் | நாளொன்றுக்கு | 67.50 |
| 2. | புகையிலையைத் துண்டுகளாக வெட்டுதல் | நாளொன்றுக்கு | 67.50 |
| 3. | சுவைக்கும் புகையிலையைப் பொட்டலமாகச் செய்தல், எடையிடுதலும், பெயர்ச்சீட்டு ஒட்டுதலும் இதிலடங்கும் | நாளொன்றுக்கு | 67.50 |
| III. | **பொதுவான வகைகள்: (வாசனைப் புகையிலை மற்றும் சுவைக்கும் புகையிலை ஆகிய இரண்டின் தயாரிப்புப் பணிகளுக்கும்)** | | |
| 1. | மேஸ்திரி | மாதமொன்றுக்கு | 2280.00 |
| 2. | காவலாள் | மாதமொன்றுக்கு | 2015.00 |
| 3. | லாரி அல்லது வேன் சுத்தம் செய்பவர் | மாதமொன்றுக்கு | 2015.00 |
| 4. | பல்வகை/தற்காலிகப் பணியாளர் | மாதமொன்றுக்கு | 2015.00 |
| 5. | அலுவலக உதவியாளர் | மாதமொன்றுக்கு | 2015.00 |
| 6. | எழுத்தர் | மாதமொன்றுக்கு | 2107.00 |
| 7. | லாரி, வேன் அல்லது கார் ஓட்டுநர் | மாதமொன்றுக்கு | 2060.00 |
| 8. | சோதனையிடுபவர் | மாதமொன்றுக்கு | 2060.00 |

**விளக்கங்கள்:**

**(1) அகவிலைப்படி,**

தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்படும்:—

(i) அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டு சென்னை மாநகருக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டு சராசரி எண்ணுடன் (அதாவது, 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475) இணைக்கப்படவேண்டும். மேற்கூறிய 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும், நாளொன்றுக்கு ரூ. 0.14 காசு (பதினான்கு காசு மட்டும்) அதிகமாக அகவிலைப்படி வழங்கப்படும்.

(ii) அகவிலைப்படி திருத்த வீதமாவது ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான முந்தைய 12 மாதங்களுக்கான விலைப் புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(iii) முந்தைய ஆண்டின் அதாவது ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான கால அளவிற்குரிய நுகர்வோர் விலைக் குறியீட்டு சராசரி எண்ணினை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கிடையே பாகுபாடு காட்டக் கூடாது.

**3.** (i) நாள் ஊதிய வீதங்களைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

**4.** இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதிய வீதங்களைக் காட்டிலும், தற்போதுள்ள ஊதிய வீதங்கள் அதிகமாக இருக்கும் இடங்களிலெல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**அறிவிக்கை**

*[அரசாணை (2டி) எண் 61, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜே—1)த் துறை, நாள்: 7 நவம்பர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1)உட்பிரிவின் (b) பகுதியிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள கூட்டு ஆலைகள், நூற்பாலைகள், நெசவாலைகள், முன்வரையறையற்ற ஆலைகள் (open ended mills), உட்பட துணி ஆலைகள் மற்றும் மேற்சொன்ன ஆலைகளில் பஞ்சடிக்கும் அறை, பஞ்சுநூல் சிக்கெடுத்தல், நூலிழையாக்குதல் (drawing), கைவிசைச் சட்டத் தறிகள் (fly frames), நூற்றல், சுற்றுதல், மடித்தல், பொதித்தல், சிப்பம் செய்தல், பாவுநூல் அமைப்பு பசையூட்டுதல் போன்ற பல்வேறு செய்முறைகள் மற்றும் துணி ஆலைகளில் பிற செய்முறைகள் ஆகியவற்றை தனியாக செய்யும் அல்லது கூட்டாகச் செய்யும் தொழில் பழகுநர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதத்தை நாளொன்றுக்கு ரூ.110/– (ரூபாய் நூற்று பத்து மட்டும்) என்று இதனால் நிர்ணயம் செய்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. பெறப்பட்ட கருத்துரைகள் மற்றும் ஆலோசனைகள், இச்சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

***விளக்கங்கள்***: (1) தொழில் பழகுநர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு, அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது 2000ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண் 475 புள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டதாகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு கூடுதலாக 23 காசுகள் (இருபத்து மூன்று காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி முந்தைய 12 (பன்னிரெண்டு) மாதங்களுக்கு அதாவது, ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

(3) மாத ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

(5) இந்த அறிவிக்கை, 7 நவம்பர் 2008ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**சி. கீதாபழனி,**
*இயக்குநர் (பொறுப்பு),*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 5, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M1)த் துறை, நாள்: 23 ஜனவரி 2009.]*

1952ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் 13ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 2 ஆம் பிரிவைச் சேர்ந்த (a) பகுதியிலுள்ள (i) உட்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவை நீங்கலாக, பணியாளரமைப்புகள் தொடர்பான தொழிலாளர்கள் வருங்கால வைப்பு நிதிகள் திட்டம், ஓய்வூதிய திட்டம் மற்றும் ஈட்டுநிதித் திட்டங்களுக்கு, தமிழ்நாட்டிலுள்ள வட்டார வருங்கால வைப்பு நிதி ஆணையாளர் அலுவலகத்திலுள்ள வைப்பு நிதி அதிகாரிகள் மற்றும் அமலாக்க அதிகாரிகள் அனைவரையும் தமிழ்நாடு மாநிலம் முழுவதற்குமான ஆய்வாளர்களாக இதனால் நியமிக்கிறார்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்,*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.